MAY 2024 **P/ID 35325/PTL3R**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்கட்கு முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. சமூகவியல் - சொற்பொருள் கூறுக.

2. உத்தி என்றால் என்ன?

3. கவிதையியல் நூலைத் தமிழாக்கியவர் யார்?

4. பரிபாடல் - பெயர்க் காரணம் கூறுக.

5. வெண்பாவின் ஓசை எது?

6. மெய்ப்பாட்டை வடநூலார் எவ்வாறு சுட்டுவர்?

7. இராவணன் எந்த நாட்டு மன்னன்?

8. சிலப்பதிகாரத்தில் எத்தனை காண்டங்கள், காதைகள் உள்ளன?

9. பெருங்கதையின் மூல நூல் எது?

10. உலகப் பொதுமறையான அற இலக்கியம் யாது?

11. அகப் பாடலில் இடம்பெறும் முப்பொருள் எவை?

12. தனித்தமிழ் இயக்கம் கண்டவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்கட்கு முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. ஒப்பிலக்கிய அறிஞர் ரிமாக் குறித்து நீர் அறிவன யாவை?

14. தன்னுணர்ச்சிப் பா இயலுமாற்றை விளக்குக.

15. துன்பியல் நாடகம் எவ்வாறு அமையும்?

16. அறிஞர்கள் ஒரே மாதிரியாகச் சிந்திப்பார்கள் என்னும் கருத்து ஏற்புடையதா?

17. இலக்கியத்தில் உவமை எதற்காக? விளக்குக.

18. காப்பியத்தில் வர்ணனை இடம்பெறுவதேன்? விளக்குக.

19. ஏட்டிலக்கியத்தை, நாட்டுப்புற இலக்கியம் வளப்படுத்தியதா? எவ்வாறு?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. ஒப்பிலக்கியம் என்ற சொல்லின் தோற்றப் பின்புலத்தை ஆய்க.

21. ஏதேனும் ஓர் ஒப்பிலக்கிய ஆய்வு நெறிமுறையை விளக்குக.

22. உலக இலக்கியத்தின் சிறப்புகளை விளக்குக.

23. இருமொழி இலக்கிய ஒப்பீட்டினைச் சான்று தந்து விளக்குக.

24. க. கைலாசபதியின் ஒப்பிலக்கியப் பங்களிப்பை விளக்குக.

———————